1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்காக அல்ல; நேரத்திற்காகத்தான் பார்க்கிறேன். சரி, திரு. ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் வாயிலாக, இதுபோன்ற — அதாவது, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; பொதுவாக தமிழகம் முழுவதுமாக, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாகவும் — காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது, குடிநீர் வசதி செய்து கொடுக்கிறீர்கள். அதேசமயத்தில், மின்சார வசதியையும், காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போதே, சேர்ந்தாற்போல செய்து கொடுத்து விடுவீர்களானால்— ஏனென்றால், சில ஊர்களில், ஓராண்டு இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் என்று இன்னும் மின்வசதி செய்து கொடுக்கப்படாமல், அது சீனியாரிட்டிபடிதான் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்கள் — அந்தப் பொதுமக்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்விப் போடவும்.

அடுத்து, வினா எண் 160, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

ஒகேனக்கல்லில் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறப்புத் திட்டம்

*10631—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காவிரி இணையும் இடமான ஒகேனக்கல்லில் சுற்றுலாப் பயணிகள் தங்கவும் மற்றும் அவர்களுக்கான இதர வசதிகள் கிடைக்கவும் சிறப்புத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியில், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுற்றுலாத் தலத்திற்காக பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஓட்டல் ஒன்றும், இளைஞர் விடுதி ஒன்றும் நடத்தி வருகிறது.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு எஸ்டிமேட் கமிட்டியிலே, *2, 3* முறை நான் போயிருக்கிறேன். அது சிறப்பான இடம். அதிலே எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறபோது, எல்லா வியாதிகளுமே போகிற அளவுக்கு, கொடைக்கானலைவிட ஒரு நல்ல நீர்வீழ்ச்சியாக இருக்கிற காரணத்தினால், வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் வருகிறார்கள். அவ்வாறு அவர்கள் வருகிறபோது, அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் உடனே அதையெல்லாம் கட்டுகிறோம் என்று. எது எதற்கோ விளம்பரம் கொடுக்கிறீர்கள். ஒகேனக்கல் முக்கியமான இடம். ஆகவே, கண்டிப்பாக இதை அரசு செய்துதர வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் பகுதியைப் பொறுத்தமட்டில் அங்கே ஒரு சிறந்த நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சியில் நீராடுபவர்கள் மருத்துவ குணம் உள்ள அந்தத் தண்ணீரில் குளித்து மகிழ்வதுடன், அவர்களுடைய நோய் நொடியும் நீங்குகிறது. மேலும் அங்கே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ள தேச நதீஸ்வரர் என்னும் சிவன் கோவில் ஒன்றும், ஒரு விஷ்ணு கோவில் ஒன்றும் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கிற்காக ஒரு சிறு மிருகக் காட்சி சாலையும், முதலைப் பண்ணை ஒன்றும் உள்ளன. மேலும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு கர்நாடக மாநிலத்திற்கு அருகிலே உள்ள தர்மபுரி மாவட்டத்திற்கு அதிகமானச் சுற்றுலாப்பயணிகள் வருகின்ற காரணத்தினால் அதற்குச் சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்க ஆணையிட்டு, அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

1995 மார்ச் 29]

திரு. எஸ். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புத் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வருகின்ற சுற்றுலாப்பயணிகள் தங்கிச் செல்வதற்கும், அப்படித் தங்குகின்ற காலகட்டங்களிலே பொழுது போக்கிற்காக நீர்வீழ்ச்சியில் நீராடுவதோடு மட்டுமல்லாமல், இறைவழிபாட்டுக்காக, சிவன் கோவில் ஒன்றும், விஷ்ணு கோவில் ஒன்றும் உள்ளன. முதலைப் பண்ணை மற்றும் சிறு மிருகக் காட்சி சாலை ஒன்றும் உள்ளன. அங்கே செல்லுகின்ற மக்களுக்கு குளியல் படித்துறை வசதி, நீர்வீழ்ச்சிக்குச் செல்லுகின்ற நடைபாலம், காவிரி நதியில் தீவுப் பகுதிக்குச் செல்லக்கூடிய பாதையைச் செப்பனிடுவதோடு, அங்கே ஒரு நடை மேடை அமைக்கக் கூடிய கருத்துரு, பேருந்து நிலையத்திற்கு அருகில் இசைக்கேற்ப நடனமாடும் நீருற்று அமைப்பதற்கானத் திட்டம், அருவிக்கரை அருகில் படித்துறைக்குச் செல்லும் வழியில் படிகள் அமைத்தல் ஆகிய சிறப்புத் திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளன.

152—

தாவர எண்ணெய் இரண்டாவது விற்பனைக்கு வரி

*16452—**திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாவர எண்ணெய் வியாபாரிகள் பினாமிகளுக்கு விற்பனை செய்து விட்டு, அது முதல் விற்பனை என்றும் பின்னர் செய்யப்படுவது இரண்டாவது விற்பனை என்பதால் விற்பனை வரி செலுத்தாமல் இருப்பதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

தாவர எண்ணெய் வியாபாரத்தில் செய்யப்படும் வரி ஏய்ப்புகள் குறித்த புகார்கள் பெறப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).